இருக்கின்றது. ஆகவே அங்கெல்லாம் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா? அதோடு மேலும் காடுகளில் யானைகளை பெருக்குவதற்கு அரசிடம் திட்டங்கள் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் (1972 ஆம் ஆண்டு) ஒன்றும் ஷெட்யூலில் கண்டுள்ளபடி யானைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. யானைகள் எந்தப் பகுதியில் இருந்தாலும் பாதுகாப்புக்கு உட்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, யானைகளுக்கு இப்போது சரணாலயம் எதுவும் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? மேலும் இப்படிப்பட்ட சரணாலயத்தின் எல்லைகளுக்கு உட்படாத இடங்களிலுள்ள யானைகள் பக்கத்திலுள்ள கிராமங்களில் சென்று அட்டகாசங்கள் செய்து வருவதால், விவசாயிகளுடைய விவசாயம் பாதிக்கப்பட்டு வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே, இப்படிப்பட்ட யானைகளை கட்டுப்படுத்த அரசு ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இங்குள்ள கேள்வி யானைகளுக்குச் சரணாலயம் அமைத்து யானைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பது. ஆனால், யானைகளினால் ஏற்படுகின்ற தொல்லைகளைப் பற்றி இங்கு சொல்லுகிறார்கள். ஆகவே, தொல்லைகள் எந்த மிருகங்களால் ஏற்பட்டாலும் மக்களுடைய சொத்துக்களையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்கு அரசு முயன்று இயன்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

பணி நிரந்தரமாக்கப்படாமல் உள்ள ஆசிரியர்கள்

*வினா 25—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—4—1970-க்குப் பின் வேலையில் அமர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் உள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இவர்களுக்கு P. F. பிடிக்கப்பட்டு வருகிறதா ?

(இ) இவர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க அரசு செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) பட்டதாரி ஆசிரியர்கள் 796

தமிழாசிரியர்கள் 135

(ஆ) ஆம்.

(இ) மேற்கூறிய ஆசிரியர்களின் பணியினை வரன்முறைப் படுத்த தனியாக ஒரு நேரடி நியமனத் தேர்வு நடத்துமாறு 30—12—1977 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 2683-இல் தமிழ்நாடு தேர்வாணைக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—4—1970-ல் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 796 பேர்கள் என்றும், தமிழ் ஆசிரியர்கள் 136 பேர்கள் என்றும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு பிராவிடண்ட் பண்டு பிடிக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. இப்படியிருந்தும், எதற்காக அவர்களுக்குத் தேர்வு முறையை அமுலாக்க வேண்டும்? அரசுத் துறையிலே நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 240 நாளைக்கு மேல் பணியாற்றினால், நிரந்தரமாக்கப்படாத கொள்கை இருக்குமானால், தனியார்களை நாம் எப்படிக் கட்டுப்படுத்த முடியுமென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசுத் துறைக்கு ஆட்களை நியமிக்கின்ற அதிகாரத்தை நாம் தேர்வு ஆணைக் குழுவிற்கு அரசியல் சட்ட ரீதியாகக் கொடுத்திருக்கிறோம். அதை நாம் நிறைவேற்றக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நிரந்தர வேகன்சி இருப்பதை கணக்கில் காட்டி, அதற்கான கிராண்டுகளை திருச்சியிலுள்ள ஹோலி கிராஸ் காலேஜ் வாங்கிக் கொண்டு, அந்த

நிரந்தரமான வேகன்சிகளைப் பூர்த்தி செய்வதில்லை. அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் 30—3—1977 தேதியிட்ட ஆணையில் அந்தத் தேதியில் வேலையில் இருக்கக்கூடியவர்கள் கல்லூரியிலிருந்து நீக்கப்படக் கூடாது என்றும், புதிதாக ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது என்றும் உத்தரவிட்டதால், தனியார் கல்லூரிகளிலே இருந்து 200-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டது உண்மையா? அப்படியானால், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆசிரியர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற உத்தரவைப் போட்டதே, இந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த உறுதியின்படி அந்த ஆணையை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார் 1—10—1970-க்குப் பிறகு வேலையில் அமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் உள்ளதைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதிலில் கூறினார்கள். அதேபோன்று அதிகாரிகள் உத்தரவிட்டதற்குப் பிறகும்கூட, இதுவரையில் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கக்கூடிய ஆசிரியர்களைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவர்களை உடனடியாக வேலையில் திருப்பி எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதற்கான பதிலைத் தான் நான் இப்போது சொன்னேன். அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டப் பிறகும் 5, 6 ஆண்டுகளாக வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு சீக்கிரம் வேலை கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1978 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழுவால் வேலை அளிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு, வேலை தருகின்ற நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 ஆண்டு 5 மாத காலம் பணியாற்றியவர்களை மீண்டும் சர்விஸ் கமிஷன் மூலம் தேர்வு செய்ய வேண்டுமென்ற நிலை இருக்குமானால், அவர்களுக்கு நிச்சயமாக வேலை கிடைக்காது, சர்விஸ் கன்டினியூடியும் கிடைக்காது. எனவே, இந்த 1—4—1970-லிருந்து இவர்களுக்கு ஊதிய உயர்வு, சர்விஸ் தொடர்ச்சி உண்டாவதற்கான உத்தரவினை இந்த அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசினுடைய அதிகாரத்திற்கும் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அந்தக் கட்டுப்பாட்டுக்குள் அதிகமாக எந்த அளவுக்கு அந்த ஆசிரியர்களுக்கு உதவியைச் செய்ய முடியுமோ அந்த உதவியைச் செய்ய இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு நடவடிக்கையை எடுத்திருக்கிறோம்.

திரு. அ. செல்லப்பா : தனியார் பள்ளியில் அமர்த்தப்பட்டு வேலை செய்யும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு, தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலான ஆசிரியர்களுக்கு 'அடாடா' பணம் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அதனை உடனடியாக வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களில் செகண்டரி கிரேடு படித்தவர்கள் ஆயிரக்கணக்கில் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் பல பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிப்பதற்கான இடங்கள் இருந்தும் அவற்றிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலே வைத்திருக்கிறார்கள். இருக்கிற இடங்களில்

ஏன் ஆசிரியர்களைப் போடவில்லை என்று சி. இ. ஓ. போன்ற அதிகாரிகளிடம் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில் கேட்டபோது அரசின் கொள்கை அப்படி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, காலியான இடங்கள் இருந்தால் அங்கே பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உடனடியாகப் போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களைப் போடுவதற்கு உரிய இடங்கள் காலியாக இருக்கின்றன என்பது அவ்வளவு சரியல்ல. ஆனால் ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்திற்கேற்ப ஆயிரக் கணக்கான இடங்களை ஏற்படுத்த வேண்டிய நிலைமை நாட்டில் இருக்கிறது. நிதி ஆதாரங்களைப் பொறுத்து ஆண்டுக்காண்டு புதிய இடங்களை ஏற்படுத்தி வருகிறோம். அதிலே அந்த ஆசிரியர்களைப் போட்டு வருகிறோம்.

நெல்லை மாவட்டத்தில் ஆசிரியர் பதவிகள்

* வினா 26—*திரு. ரா. கிருஷ்ணன் :* மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில், இப்பள்ளியாண்டில் புதிதாக எத்தனை ஆசிரியர்கள் நியமனம் செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளனர் ?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் தனியார் பள்ளிகளில் நியமிக்க அனுமதிக்கப்பட்டனர் ?

(இ) ஊராட்சி ஒன்றியங்கள் நகராட்சி போன்ற பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் தேவை என்று கணக்கிடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (ஆ) 1977—78 ஆம் கல்வியாண்டு முதல் திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக ஏற்படுத்திய கூடுதல் ஆசிரியர் பதவிகள் 114-ல் 88 பதவிகள் தனியார் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டன.